தினமணி

**"மாதிரி இயற்கை வேளாண் பண்ணை'**

First Published : 03 Feb 2011 01:38:50 AM IST

புதுச்சேரி, பிப். 2: மாதிரி இயற்கை வேளாண் பண்ணை அமைக்கப்படும் என்று முதல்வர் வைத்திலிங்கம் அறிவித்தார்.

÷சட்டப் பேரவையில் பட்ஜெட் உரையில் அவர் கூறியது:

÷துல்லிய வேளாண்மை முறையின்கீழ் காய்கறி உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 1.5 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. கனிகளை பழுக்கவைக்கும் முறையுடன் கூடிய குளிர்சாதன கிடங்கு ஒன்று அமைக்கப்படுகிறது. விவசாயிகள் கூடுதலாக வருவாய் பெறும் வகையில், ஆண்டுதோறும் விளையக்கூடிய தோட்டப்பயிர்களை நிழல்வலை சாகுபடிமூலம், சாகுபடி செய்ய 90 சதவீத மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

÷தேசிய இயற்கை சாகுபடி மையத்திடமிருந்து நிதியுதவி பெற்று பெருந்தலைவர் காமராஜர் வேளாண் மையத்தின் மூலமாக புதுச்சேரியில் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் மாதிரி இயற்கை வேளாண் பண்ணை அமைக்கப்படும்.

விரைவில் மழை நிவாரணம்: புதுச்சேரி, காரைக்காலில் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட பயிரின் சேத விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும்.

÷புதுச்சேரியின் முதன்மை நீர் ஆதாரமான ஊசுடு ஏரி ரூ. 56 லட்சம் செலவில் 2011-ம் ஆண்டில் சங்கிலித் தொடர்வேலி அமைத்து பாதுகாக்கப்படும். பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்ட இந்த ஏரியை பாதுகாக்க, நிதியுதவி அளிக்க மத்திய அரசு முன்வந்துள்ளது. மத்திய அரசின் ஒப்புதலுக்காக விரிவான திட்டம் இறுதி செய்யப்பட்டு வருகிறது.

கால்நடை: கறவை மாடுகளுக்கு இலவசமாக காப்பீடு செய்யப்படும். இறைச்சி உற்பத்தியைப் பெருக்க ஐந்து பெண் வெள்ளாடு, செம்மறியாடு மற்றும் ஒரு ஆண் வெள்ளாடு செம்மறியாடு கொண்ட ஓர் அலகு என்ற விகிதத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 400 அட்டவணை இனத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்றார் முதல்வர் வைத்திலிங்கம்.

**ஒழுங்கு இல்லாத ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்**

First Published : 03 Feb 2011 01:50:25 AM IST



புதுச்சேரி தட்டாஞ்சாவடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிடங்குக்கு வெளியில் நெல் மூட்டையுடன் காத்திருக்கும் விவசாயிகள்.

புதுச்சேரி, பிப். 2: புதுச்சேரி தட்டாஞ்சாவடி பகுதியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பல்வேறு வகையிலும் ஒழுங்காகச் செயல்படாததால் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

÷இப்போது அதிக அளவில் நெல் மூட்டைகள் இங்கு விற்பனைக்காகக் குவிகின்றன. எடை போடுவது சரியாக இருக்கிறது என்ற காரணத்துக்காகவும், அருகில் வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இல்லாத காரணத்தாலும் புதுச்சேரியைச் சுற்றியுள்ள தமிழகப் பகுதி விவசாயிகளும் இங்கு விற்பனைக்காக நெல் மூட்டைகளைக் கொண்டு வருகின்றனர்.

÷ஒழுங்குமுறை விற்பனைக் கூட விதியின்படி, இங்கு விற்பனை செய்யப்படும் விளைபொருள்களுக்கு அன்றைக்கு அன்றாடம் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். ஆனால் குறைந்தது 5 மூட்டை நெல்லுக்கு மேல் இங்கு விற்பனை செய்தால் பணம் கிடைக்கக் குறைந்தபட்சம் ஒருவாரமாவது பிடிக்கிறது என்று பக்கிரிப்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி பி.ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

÷புதுச்சேரியில் இந்திய உணவுப் பொருள் கழகம் ஏற்கெனவே நெல் கொள்முதல் செய்தது. இப்போது இந்தக் கழகம் கொள்முதல் செய்வதில்லை. இதனால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நெல் கொள்முதல் செய்யும் தனியார் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து குறைந்த விலையில் நெல் கொள்முதல் செய்வதாக பேராவூரைச் சேர்ந்த விவசாயி ஆர். திருமலை கூறுகிறார்.

÷இப்போது அறுவடை சீசன் என்பதால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு அதிக அளவில் நெல் வரத்து இருக்கிறது. இதனால் நெல் விலை இப்போது மந்தமாக இருக்கிறது.

÷ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் ஓய்வு அறை இருக்கிறது. ஆனால் பயன்படுத்தும் வகையில் அந்த அறை இல்லை. அதில் தேவையில்லாத பழைய பொருள்கள் போட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் இக் கூடத்தில் விவசாயிகளுக்குத் தேவையான கழிப்பறை வசதி, குடிநீர் வசதியும் இல்லை.

÷இந்தக் கூடத்தில் ஏலக் கொட்டகை இருக்கிறது. இதில் விவசாயிகள் கொண்டு வரும் நெல் உள்ளிட்ட விளைப்பொருள்கள் வைக்கப்பட வேண்டும். அங்கு எடை போடப்பட்டு வியாபாரிகள் அதை உடனே எடுத்துச் செல்ல வேண்டும். நெல் வரத்து அதிகமாக உள்ள நிலையில் வியாபாரிகள் கொள்முதல் செய்யும் நெல் மூட்டைகளை அதே இடத்தில் அடுக்கி வைத்துள்ளனர்.

இதனால் விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டைகள் ஏலக் கொட்டகைக்குள் கொண்டு வர முடியாமல் வெளியே வைக்கப்படுகின்றன. ஒரு சில நேரங்களில் மழை பெய்தால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.÷ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பணியாற்றும் ஊழியர்கள்தான் இங்கு எடுத்து வரும் நெல் உள்ளிட்ட விளைபொருள்களை எடை போடுகின்றனர். எடை போடும் ஊழியர்கள் அடாவடியாக ஒரு மூட்டை நெல் எடை போடுவதற்கு ரூ.5 வசூல் செய்கின்றனர் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

பணம் கொடுக்கவில்லையென்றால் எடைப் போடுவதைத் தவிர்ப்பார்கள் அல்லது எடை போட்டுவிட்டு ரசீது கொடுக்காமல் இழுத்தடிப்பார்கள் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

÷விவசாயிகள் ஒரு பைசாகூட செலவு இல்லாமல் விளைபொருள்களை விற்பனை செய்வதற்காகத்தான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தக் கூடம் வியாபாரிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. விவசாயிகளைப் பின்னுக்குத் தள்ளுகிறது.

**பொருளாதார வளர்ச்சி 10 சதவீதம்: ஆளுநர் உரையில் தகவல்**

First Published : 03 Feb 2011 01:39:36 AM IST



புதுச்சேரியில் புதன்கிழமை தொடங்கிய சட்டப் பேரவை கூட்டத் தொடரில் பேசுகிறார் துணைநிலை ஆளுநர் இக்பால் சிங்.

புதுச்சேரி, பிப். 2: புதுச்சேரியின் பொருளாதாரம் சுமார் 10 சதவீதம் என்ற ஆண்டு வளர்ச்சி வீதத்தில் வளர்ந்து வருகிறது என்று துணைநிலை ஆளுநர் டாக்டர் இக்பால் சிங் தெரிவித்தார்.

÷புதுச்சேரி சட்டப் பேரவையின் இடைக்கால பட்ஜெட் கூட்டத் தொடர் புதன்கிழமை தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் துணைநிலை ஆளுநர் உரை இதில் இடம் பெற்றது. அப்போது தன்னுடைய உரையில் இக்பால்சிங் கூறியது:

÷புதுச்சேரியின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2007 முதல் 2010 முழுவதும் காக்கப்பட்டு வந்ததுள்ளது.

÷மத்தியத் திட்டக் குழு 12-வது ஐந்தாண்டு திட்டத்துக்கான அணுகுவழி ஆய்வை ஏற்கனவே தொடங்கியுள்ளது. இது குறித்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் பின்பற்ற வேண்டிய செயல்முறைகளை திட்டக் குழு விரைவில் அறிவிக்கும். இதற்கிடையே, புதுச்சேரியின் சீரிய வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில் திட்டக் குழு புதுச்சேரி யூனியன் பிரதேச வளர்ச்சி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

÷திட்ட ஒதுக்கீட்டுக்கு ஏற்றவாறு புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் சொந்த நிதி ஆதாரங்களும் உயர்ந்துள்ளன. நடப்பாண்டில் புதுச்சேரியின் வரவு சென்ற ஆண்டின் வரவான ரூ. 1,510 கோடியில் இருந்து ரூ. 1,900 கோடியாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

÷2009 - 2010 ஆம் நிதியாண்டில் ரூ. 1,450 கோடியாக இருந்த திட்டச் செலவினம், நடப்பு நிதியாண்டில் மேலும் அதிகரிக்கும். பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான உதவிக் கொடைகளை போதுமான அளவுக்கு அளித்தற்காக மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

÷துணைமை, சேவைத் துறைகள் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 96 விழுக்காட்டை அளித்துள்ளதால் புதுச்சேரி பொருளாதாரம் புத்தாக்கம் பெற்றுள்ளது. முதன்மைத் துறையானது சுமார் 4 விழுக்காடு மட்டுமே அளித்துவரும் போதிலும்கூட, இத்துறைக்கும் போதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**தனிநபர் வருமானம் உயர்வு:** ஆண்டு கடன் திட்டம் பொதுத்துறை நிதி நிறுவனங்களினால் நீட்டிக்கப்பட்ட கடன் வசதிகளோடு திட்டம் சார்ந்த செயல்திட்டங்கள் நன்றாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதனால் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தனிநபர் வருமானம் தற்போதைய விலைவாசி அடிப்படையில் 2009-2010-ம் ஆண்டில் ரூ. 72,917 அளவுக்கு எட்ட வழிவகுத்துள்ளது.

÷இங்கு தனிநபர் திட்டச் செலவினம் தற்போது ரூ. 14,882 என்ற அளவில் உள்ளது. அது நடப்பு நிதியாண்டின்போது அதிகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் காரணமாக ரூ. 18,000 வரை உயர வாய்ப்புள்ளது என்றார் துணைநிலை ஆளுநர்.

ஏற்றுமதிக்கு வாய்ப்பு: சோற்று கற்றாழை பயிரிட்டு அதிக லாபம் பெறலாம்

First Published : 03 Feb 2011 04:29:58 AM IST



அரக்கோணம்: மூலிகை பயிரான சோற்றுக்கற்றாழையை இங்கிலாந்து உள்ளிட்ட வெளிநாடுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது. எனவே சோற்றுக்கற்றாழை பயிரிட்டு அதிக லாபம் ஈட்டலாம்.

சோற்றுகற்றாழை வறட்சியான பகுதிகளுக்கு ஏற்ற பயிராகும். பல்வேறு அழகுசாதனங்கள், மருந்து பொருள்கள் தயாரிப்பதற்கு இது பெரிதும் பயன்படுகிறது. இந்தியாவில் ராஜஸ்தான், ஆந்திரம், குஜராத், தமிழ்நாட்டில் சேலம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இது பெருமளவில் பயிரிடப்படுகிறது.

3 வகை கற்றாழை: குர்குவா கற்றாழை, கேப் கற்றாழை, சாகோட்ரின் கற்றாழை என கற்றாழையில் மூன்று வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் பயிரிடப்பட்டு வருவது குர்குவா கற்றாழை.

வறட்சிப் பிரதேசங்கள் மற்றும் கடல் மட்டத்தில் இருந்து 4 ஆயிரம் அடி உயர மலைபிரதேசங்களிலும் இது பயிரிடப்படுகிறது. இதன் இலைகள் தடிமனாகவும், சிறிது சிவப்பு கலந்து பச்சை நிறத்தில், 30 முதல் 60 செ.மீ. நீளமாக சிறிய முட்களுடன் இருக்கும்.

தரிசுமண், மணற்பாங்கான நிலம், பொறைமண் போன்றவை இதற்கு ஏற்றது. எனினும் எல்லா வகையான மண்ணிலும் கற்றாழையை சாகுபடி செய்யலாம். நல்ல வடிகால் வசதியுடன் கூடிய மணற்பாங்கான நிலம் மிகவும் ஏற்றது.

நடவு: தாய்ச்செடியில் இருந்து ஒன்று அல்லது இரண்டு வயதுடைய பக்கக்கன்றுகளை பிரித்து நடவுக்கு பயன்படுத்த வேண்டும். ஒரே அளவுள்ள கன்றுகளை தேர்ந்தெடுத்தல் முக்கியம். இதனால் செடிகள் சீராக வளர்வதுடன் ஒரே சமயத்தில் அறுவடைக்கு வரும்.

கற்றாழையை தனிப்பயிராக பயிரிடும்போது ஹெக்டேருக்கு 10 ஆயிரம் கன்றுகள் தேவைப்படும். இப்பயிரை வருடத்துக்கு இரண்டு பருவங்களில் பயிரிடலாம். ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடவு செய்யலாம். இலைகள் முற்றும் தருவாயில் ஓரளவு வறட்சியான தட்பவெப்பம் இருக்க வேண்டும். இதனால் இலையில் தரமான கூழ் கிடைக்கும்.

நிலத்தை இரணடு முறை உழுது, ஹெக்டேருக்கு 10 டன் தொழு உரம் இட்டு, சமன் செய்து சிறிய பாத்திகளை அமைக்க வேண்டும். செடிகள் வாளிப்பாக வளர்வதற்கு செடிகளுக்கிடையே 3 அடி இடைவெளி விட்டு நடவேண்டும்.

இப்பயிருக்கு ரசாயன உரங்கள் தேவைக்கேற்ப இட வேண்டும். வளமான நிலங்களுக்கு தொழு உரம் இட்டால் போதுமானது. தரிசு மற்றும் வளமில்லாத மண்ணுக்கு செடிகளை நட்ட 20-வது நாளில் ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்து இடுவது அவசியம். ஹெக்டேருக்கு 120 கிலோ ஜிப்சத்தை அடியுரமாக இடுவது அவசியம். இதனால் கூழ் அதிக அளவில் கிடைக்கும்.

கற்றாழையில் அதிக பூச்சித் தாக்குதல், நோய்கள் தோன்றுவதில்லை.

நீர்த் தேங்கும் நிலத்தில் அழுகல் நோய் ஏற்படும். இதற்கு நிலத்தில் வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும்.

அறுவடை: நட்ட ஆறு முதல் ஏழு மாதங்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். செடிகளை வேரோடு பிடுங்கி எடுத்து, இலைகளை ஆறு மணி நேரத்திற்குள் பக்குவபடுத்துவதற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

ஹெக்டேருக்கு 15 டன் கற்றாழை இலை கிடைக்கும். இலைகளில் 80 முதல் 90 சதவீதம் நீர் உள்ளதால் விரைவாக கெட்டுவிடும். இதனால் அறுவடை செய்த உடனே இலைகளை பக்குவப்படுத்தி அவற்றில் இருந்து கூழை பிரித்தெடுக்க வேண்டும்.

அரக்கோணம் வட்டம், தண்டலம் ஊராட்சி கேசவபுரத்தை சேர்ந்த சுரேந்தர்பாபு முதன் முதலாக 4 ஏக்கர் நிலத்தில் சோற்றுகற்றாழையை பயிரிட்டுள்ளார். கற்றாழை பயிரிட விரும்புவோர் அவரிடம் ஆலோசனை பெறலாம்.

கேசவபுரம் கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள சோற்றுக்கற்றாழை.

**கரும்பு தோகையை உரமாக்குவது எப்படி?**

தே. சாலமன்

First Published : 03 Feb 2011 04:29:27 AM IST



செய்யாறு: கரும்பு தோகையை எரிக்காமல் அதை உரமாக்கி பயன்படுத்தும் முறை குறித்து வேளாண் துறையினர் யோசனை கூறியுள்ளனர்.

கரும்பு அறுவடைக்குப் பிறகு பெரும்பாலான விவசாயிகள் கரும்பு தோகையை வயலிலேயே எரித்து விடுகின்றனர். இதனால் ஒரு ஹெக்டேருக்கு 25 டன் இயற்கை எரு வீணாகிறது.

எருவின் மூலம் கிடைக்கக் கூடிய 100 கிலோ தழைச்சத்து (220 கிலோ யூரியாவுக்கு சமம்) 50 கிலோ மணிச்சத்து (315 கிலோ சூப்பர் பாஸ்பேட்டுக்கு சமம்), கந்தகச் சத்துகள் கிடைப்பதில்லை. மேலும் மறுதாம்பு கரும்பின் முளைப்புத்திறன் 30 சதவீதம் குறைகிறது. வளர்ச்சியும் தடைபடுகிறது.

மண்ணில் வாழும் நுண்ணுயிரிகள், மண்புழுக்கள் அழிக்கப்படுகின்றன. எரிப்பதால் ஏற்படும் புகையால் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. எனவே கரும்புத் தோகையை எரிக்காமல் உரமாக்கி நிலத்தை வளப்படுத்தலாம்.

உரமாக்கும் முறை:

கரும்பு வயலின் ஒரு மூலையில் 9ஷ்5ஷ்1 மீட்டர் அளவில் குழி எடுக்க வேண்டும். அக்குழியில் 500 கிலோ கரும்பு தோகையினை போட வேண்டும். அதன் மேல் வயல் மண் (அ) கரும்பு ஆலைக்கழிவு (பிரஸ்மட்) 500 கிலோவை இட்டு, அதன் மேல் 10 கிலோ பாறை பாஸ்பேட், 10 கிலோ ஜிப்சம் மற்றும் 5 கிலோ யூரியா கலவையை தூவ வேண்டும். மேற்கூறிய அனைத்தும் நன்கு நனையும்படி நீர்த் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு உருவாக்கிய அடுக்கின் மேல் மாட்டுச்சாணம், மக்கிய எரு மற்றும் வயல் மண் கலந்த கரைசலை 500 லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். இவ்வாறாக குழி நிரம்பும் வண்ணம் 10 முதல் 15 அடுக்குகள் இடுவதன் மூலம் 5 டன் கரும்பு தோகையை உரமாக்கலாம்.

இறுதியாக உரக்குழியை நில மட்டத்துக்கு மேல் அரை அடி உயரம் மேடாகும் வண்ணம் மண் கொண்டு மெழுகி மூடிவிட வேண்டும்.

மூன்று மாதங்கள் கழித்து குழி முழுவதையும் நன்கு மக்குமாறு கலக்கிவிடவேண்டும். மக்கும் எரு நன்கு நனையுமாறு வாரம் ஒருமுறை நீர்த் தெளித்து பராமரித்தால் ஆறு மாதத்துக்குள் மக்கிய கரும்பு தோகை உரம் தயாராகிவிடும். இதை எல்லா பயிர்களுக்கும் பயன்படுத்தி நல்ல பயன் பெறலாம் என செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவுத்துள்ளார்.

**களர், உவர் நிலங்களை மானிய உதவியுடன் சீரமைக்கலாம்: வேளாண்மை உதவி இயக்குநர்**

First Published : 03 Feb 2011 04:28:55 AM IST

Last Updated : 03 Feb 2011 04:30:44 AM IST

வேலூர்: வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் களர் மற்றும் உவர் நிலங்களை அரசின் மானிய உதவியுடன் சீரமைக்கலாம் என வேலூர் வேளாண்மை உதவி இயக்குநர் சிவகுமார் சிங் தெரிவித்தார்.

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், ஒருசில கிராமங்களில், சாகுபடி செய்யும் நிலங்களில் களர் மற்றும் உவர் நிலப் பிரச்னைகள் காணப்படுகின்றன.

அதனால் பயிர் எண்ணிக்கை பராமரிக்க முடியாமலும், இடப்படும் எரு, உரங்கள் மற்றும் நீர் வேரினால் உறிஞ்ச முடியாத தன்மையாலும் பயிர் வளர்ச்சி குன்றியும், நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறையால் பெரும் மகசூல் இழப்பும் ஏற்படுகிறது.

என்ன செய்ய வேண்டும்?

களர் மற்றும் உவர் நிலச் சீர்திருத்தம் செய்ய நிலம் 25 முதல் 30 சென்ட் பரப்புக்குட்பட்டதாக இருக்க

வேண்டும்.

பெரிய நிலமாக இருந்தால் நடுவில் வாய்க்கால் அமைக்கலாம். நிலத்தின் சரிவுக்கு ஏற்ப வடிகால்கள் அமைக்க வேண்டும்.

வயலின் பரப்பிற்கேற்ப ஜிப்சத்தை கணக்கிட்டு பரவலாக இட்ட பிறகு சுமார் 10 செ.மீ. நீர் தேக்கி நன்கு உழவு செய்ய வேண்டும்.

நிலத்தில் தேக்கிய நீர் தானாகவே மண்ணில் ஊறி வடிகாலில் சேரும்படி செய்ய வேண்டும். இதற்கு ஓரிரு நாள்களாகலாம். மீண்டும் குறைந்தபட்சம் இதை 4 முறையாவது செய்ய வேண்டும்.

பிறகு மண்ணில் ஈரம் காய்வதற்கு முன் சணப்பு அல்லது தக்கை பூண்டை விதைத்து பூக்கும் சமயத்தில் மடக்கி உழ வேண்டும். பின்னர் வழக்கம்போல் விவசாயிகள் விரும்பும் பயிரை சாகுபடி செய்யலாம்.

மானியம்

தமிழக அரசு களர், உவர் நிலச் சீர்திருத்த திட்டத்தின் மூலம் களர், உவர் நிலங்களால் பாதிக்கப்பட்ட வயல்களில் மண் மாதிரி எடுத்து அதன் பரிந்துரை அடிப்படையில் ஜிப்சம் மற்றும் ஜிங் சல்பேட் உரங்கள் 50 சதவீத மானியத்தில் வழங்குகிறது.

மேலும் வடிகால் அமைக்க ஊக்கத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.1,000 மானியம் வழங்கப்படுகிறது.

வேலூர்

தற்போது 2010-11-ம் ஆண்டில் இத்திட்டம் வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் புதுப்பட்டு, வேடல், அன்வர்திகான்பேட்டை, கைலாசபுரம் சாலை, மின்னல், வையலாம்பாடி, சேரி ஐயம்பேட்டை, தச்சம்பட்டறை மற்றும் பெருவளையம் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டத்தில் கலசப்பாக்கம், ஒன்றியத்தில் லாடாவரம், சிறுவள்ளூர், வீரளூர், கிடாம்பாளையம், காம்பட்டு, படாகம் மற்றும் அனையாலை, சேத்துப்பட்டு ஒன்றியத்தில் பிலாசூர், கொரல்பாக்கம், கரைப்பூண்டி, மட்டப்பிறையூர் மற்றும் ராந்தம் ஆகிய கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என சிவகுமார் சிங் தெரிவித்துள்ளார்.

**குறைந்த செலவில் அதிக லாபம் தரும் தர்ப்பூசணி**

First Published : 03 Feb 2011 12:00:00 AM IST



தோட்டக்கலைத் துறையின் ஆலோசனை பேரில் கும்மிடிப்பூண்டியை அடுத்த அமரம்பேடு பகுதியில் பயிரிடப்பட்டுள்ள தர்ப்பூசணி.

கும்மிடிப்பூண்டி: குறைவான செலவில் அதிகமான லாபத்தை சம்பாதிக்க தர்ப்பூசணி பயிரிட விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில் அழைப்பு விடப்பட்டு உள்ளது.

÷திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் மாதர்பாக்கம், போந்தவாக்கம், அமரம்பேடு, செதில்பாக்கம், மாநெல்லூர், நேமள்ளூர், பாதிரிவேடு, தேர்வாய் உள்ளிட்ட பல பகுதிகளில் தர்ப்பூசணி பயிரிட விவசாயிகள் ஆர்வத்தோடு உள்ளனர்.

÷அப்படி தர்ப்பூசணி பயிரிடும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் விதைகளை மானிய முறையில் தந்து தோட்டக்கலைத் துறையின் ஆலோசனைப்படி குறைந்த செலவில் அதிக லாபம் சம்பாதிக்க வழிகளை தெரிவிக்கின்றனர்.

÷ஒரு ஏக்கர் நிலத்தில் தர்ப்பூசணி பயிரிட ஆகும் முதலீடு ரூ. 12 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் மட்டுமே. நிலத்தை உழுது பண்படுத்திய பின்பு 6-8 அடி அகல இடைவெளியில் கால்வாய் வெட்டிய பின் 3 அடி இடைவெளி விட்டு குழிகள் தோண்ட வேண்டும்.÷இந்த குழியில் மக்கிய தொழு உரம், ரசாயன உரங்களை இட்டு நன்கு கலக்கிய பின்பு ஒரு குழிக்கு 3-4 விதைகளை இட்டு குழிகளை மூடி விட வேண்டும்.

÷விதை தூவிய 5-வது நாள் விதை முளைத்தல் நிகழும். இதைத் தொடர்ந்து வாரத்துக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. 15-ம் நாளுக்கு பிறகு நிலத்தில் முளைத்துள்ள களைகளை அகற்ற வேண்டும். இந்நிலையில் பூச்சிமருந்து தெளித்து பயிர்களை காக்க வேண்டியது அவசியமாகும்.

÷30-35-ம் நாளில் செடியில் பூப்பூக்க தொடங்கி அதை தொடர்ந்து காய் காய்த்து பெரிதாக தொடங்கும். பயிரிடப்பட்ட 65-75 நாள்களில் தர்ப்பூசணி நன்கு வளர்ந்து விற்பனைக்கு தயாராக இருக்கும்.

÷இப்படி இரண்டு மாத கால பராமரிப்பில் தர்ப்பூசணி சாகுபடி செய்யும் போது அதிகபட்ச லாபத்தை விவசாயிகள் அடைந்து பயனடையலாம் என்கின்றனர் தோட்டக்கலைத் துறையினர்.

÷ஒரு ஏக்கர் நிலத்தில் நல்ல பராமரிப்புக்கு தக்கவாறு 10 டன் தர்ப்பூசணி வரை விளைச்சலாக வாய்ப்புண்டு. தற்சமயம் ஒரு டன் தர்ப்பூசணி ரூ. 7 ஆயிரம் முதல் ரூ.8 ஆயிரம் வரை விலை

போகிற நிலையில் குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் நிலத்தில் விளையும் 10 டன் தர்ப்பூசணியை விற்பதன் மூலம் ரூ.70 ஆயிரம் வரை விற்கலாம்.

÷செலவுகள் போக குறைந்தபட்சம் ரூ.50 ஆயிரம் லாபத்தை 2 மாதங்களில் விவசாயிகள் பெற்று லாபம் பெற வாய்ப்பு உள்ளதால் தர்ப்பூசணி ஒரு லாபகரமான விவசாயப் பயிர் என தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும் தர்ப்பூசணி பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகளை 50 சதவீதம் மானியத்துடன் தோட்டக்கலைத் துறை தருகிறது.

÷அதே போல தோட்டக்கலைத் துறையோடு சேர்ந்து தேசிய வேளாண் நிறுவனமும் தர்ப்பூசணி பயிரிடும் விவசாயிகளுக்கு கருவிகள், பாஸ்வோபாக்டீரியா, சூடாமோனாஸ் போன்ற உயிரி உரங்களை பெற்று தருகின்றனர்.

÷கூலியாள்கள் கிடைக்க சிரமமாய் இருக்கும் இது போன்ற நாள்களில் குறைந்த ஆட்களைக் கொண்டு தோட்டப் பயிரான தர்ப்பூசணி பயிரிடுவது எளிதாக உள்ளதாலும் அதில் நிறைய லாபம் கிடைப்பதாலும் விவசாயிகள் இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**வேரைப் பாதுகாத்தால் விளைச்சல் அதிகரிக்கும்**

First Published : 03 Feb 2011 12:00:00 AM IST



தேங்காய் நாரில் இருந்து தயாரிக்கப்படும் உரம்.

புதுச்சேரி: விவசாயம் செய்கிறோம். ஆனால் லாபம் கிடைக்கவில்லை. விவசாயிகள் இப்படிதான் பேசிக் கொள்கிறார்கள். ஒரு சில தொழில்நுட்பங்களைப் பின்பற்றினால் விளைச்சல் அதிகரித்து லாபம் ஈட்ட முடியும்.

÷மனிதனுக்கு இதயம், நுரையீரல் எப்படி முக்கியமோ பயிருக்கு அந்த அளவு வேர் முக்கியம். வேர் திடமாக இருந்தால்தான் பயிர் செழித்து வளரும்.

÷மனிதன் ஆக்ஸிஜனை சுவாசித்து கார்ப்பன்- டை-ஆக்ப்ஸடை வெளியிடுகிறான். பயிர்களின் வேர் கார்ப்பன்-டை- ஆக்ப்ஸடை சுவாசித்து ஆக்ஸிஜனை வெளியிடுகின்றன. வேர் வலிமையாக இருந்தால்தான் சுவாசிக்கும் திறன் நன்றாக இருக்கும்.

÷வேரைப் பாதுகாத்து விளைச்சலை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார் கூறியது:

÷வேர் வலிமையாக இருக்க அங்ககப் பொருள்களை அதிகமாகப் பயிர்களில் பயன்படுத்த வேண்டும். வேர் சுவாசம் நன்றாக இருந்தால் கண்டிப்பாக வேர் கிளைக்கும். அதிகமான கிளைப்பு காரணமாக மகசூல் அதிகரிக்கும்.

÷ஆடி, தை ஆகிய 2 பட்டங்களில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. காய்கறிகளுக்குத் தொழு உரத்துக்குப் பதிலாக தேங்காய்நார் கழிவு உரத்தை அதிகம் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் அங்ககக் கரிமசத்து இதில் அதிகமாக இருக்கிறது. இந்த உரத்தைப் பயன்படுத்தினால் வேர் திடமாக இருக்கும்.

÷கிளைப்பு நிறைய வரும். சுவாசம் நன்றாக இருக்கும். ஈரம் காக்கும் தன்மையும் கூடவே கைக்கூடும். மேலும் நன்மை தரும் நுண்கிருமிகள் வேர்ப்பகுதியில் எண்ணிக்கையில் அதிகமாகப் பெருகும். கத்தரி, வெண்டை, மிளகாய், தக்காளி, கீரைவகைகள் மற்றும் தோட்டப் பயிர்களான தென்னை, வாழை, மா, பலா, கொய்யா, சப்போட்டா, நெல்லி ஆகிய பயிர்களுக்கு தேங்காய் நார் உரத்தைப் பயன்படுத்தலாம்.

÷எந்தப் பயிராக இருந்தாலும் வேர்ப் பகுதியில் ஓர் ஏக்கருக்கு 80 முதல் 100 கிலோ வரை வேப்பம்புண்ணாக்கு இடவேண்டும். வேப்பம்புண்ணாக்கில் அசாடி ரக்டின் என்ற வேதிப்பொருள் இருப்பதால் கசப்புத்தன்மை இருக்கிறது.

÷இத்தன்மை காரணமாக வேரில் அழுகல் நோய், வேர் வாடல் நோய், வேரைத் தாக்கும் நூல் புழு வராமல் தடுக்க முடியும். இந்தப் புண்ணாக்கு நோயை உருவாக்கும் கிருமிகளை விரட்டி வேரைச் சுத்தமாக வைத்திருக்கவும் உதவும்.

**பாமாயில், துவரம், உளுந்தம் பருப்புகள் குறைந்த விலையில் விற்பனை**

First Published : 02 Feb 2011 01:42:07 PM IST

திருச்சி, பிப். 1: திருச்சி மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் பாமாயில், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை விற்பனை செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் மகேசன் காசிராஜன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

"திருச்சி மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டு வரும் உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றின் விலைகளை செவ்வாய்க்கிழமை முதல் (பிப். 1) குறைத்து விற்பனை செய்ய முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இதுவரை ரூ. 30-க்கு விற்கப்பட்டு வந்த ஒரு லிட்டர் பாமாயில் ரூ. 25-க்கும், ரூ. 40-க்கு விற்கப்பட்டு வந்த ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ. 30-க்கும், ரூ. 40-க்கு விற்கப்பட்டு வந்த ஒரு கிலோ உளுந்தம் பருப்பு ரூ. 30-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் குறைக்கப்பட்ட விலையில் சிறப்பு அத்தியாவசியப் பொருள்களை நியாயவிலைக் கடைகள் மூலம் பெற்று பயனடையலாம்' என்றார் அவர்.

**விவசாயப் பணிகளை இயந்திரமயமாக்கல் தவிர்க்க முடியாதது'**

First Published : 02 Feb 2011 11:37:36 AM IST

கோவை, பிப். 1: உணவு உற்பத்திக்கும் தேவைக்கும் உள்ள இடைவெளியைப் போக்க விவசாயப் பணிகளை இயந்திரமயமாக்குவது அவசியமானது என்று, வேளாண் துறைச் செயலர் பி.ராம மோகன்ராவ் தெரிவித்தார்.

வேளாண் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற, நெல் நாற்று நடவு இயந்திர உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் அவர் பேசியது:

வேளாண்மையைக் கைவிட்டு நகரங்களுக்கு குடிபெயரும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மாற்று வேலைவாய்ப்புகள் அதிகரித்துவிட்டதால், கிராமங்களில் பண்ணைஆட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேநேரம், பெருகிவரும் மக்கள்தொகையின் தேவையைப் பூர்த்தி செய்ய உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியம். தேவைக்கும் உற்பத்திக்குமான இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கு விவசாயத்தை இயந்திரமயமாக்கலே தீர்வாக இருக்கும்.

ஆகவே, விவசாயிகளின் மனநிலையை அறிந்து அவர்களுக்கு ஏற்ற எளிமையாகக் கையாளக் கூடிய பண்ணை இயந்திரங்களை, இயந்திர உற்பத்தியாளர்கள் வடிவமைக்க வேண்டும். நெல், காய்கறி, பழங்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் தேவை குறித்து இயந்திர உற்பத்தியாளர்கள் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமாகவே பண்ணை இயந்திரமயமாக்கலுக்கு விவசாயிகள் தயாராகிக் கொள்வர்.

இதை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, பண்ணை இயந்திரமயமாக்கலுக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இயந்திரங்கள் வாங்குவதற்கு ஏராளமான மானியம் அளிக்கப்படுகிறது.

ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையால் விளைச்சல் அதிகரித்துள்ளது. ஆனால், விவசாயிகள் அதைத் தொடர்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். இயந்திரமயமாக்கல் அதிகரித்துவிட்ட சூழலில், அதை நிலையாக இருக்கச் செய்வதில் இயந்திர உற்பத்தியாளர்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது என்றார். வேளாண் துறை ஆணையர் அதுல் ஆனந்த், தோட்டக்கலைத் துறை இயக்குநர் பி.சந்திரமோகன், வேளாண் பல்கலை. துணைவேந்தர் பி.முருகேச பூபதி, வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் எஸ்.சந்தானபோஸ், பல்வேறு வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனங்களின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

தினமலர்

**காவிரியில் நீர் குறைவு மீன் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,00:26 IST

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் பகுதிகளில் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்ததால், மார்க்கெட்டுக்கு மீன் வரத்துஅதிகரித்துள்ளது. காவிரியில் தற்போது நீர்வரத்து குறைந்து ஓடை போல் நீர் செல்வதால், ஆற்றில் அதிகளவு மீன் பிடிக்கப்படுகிறது. இதனால், உள்ளூர் மார்க்கெட்டில் மீன் வரத்து அதிகரித்துள்ளது. ஆட்டிறைச்சி கிலோ 300 ரூபாய், வாத்துக்கறி 120 ரூபாய், கோழிக்கறி 150 ரூபாய் என விற்கப்படுகிறது. காய்கறி விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. கிலோ ஒன்றுக்கு 50 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை தரம் பிரித்து விற்பனை செய்யப்படுகிறது. இதனால் காவிரியில் பிடிக்கப்படும் மீனுக்கு, வரவேற்பு அதிகரித்துள்ளது.

**நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,01:57 IST

திருநெல்வேலி: நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. பாசன பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கம் அழகியபாண்டியபுரத்தில் நடந்தது. கலெக்டர் ஜெயராமன் தலைமை வகித்தார். வேளாண்மை இன்ஜினியரிங் துறை செயற்பொறியாளர் சந்திரன் வரவேற்றார். பயிலரங்கை அமைச்சர் பூங்கோதை துவக்கி வைத்து பேசும் போது, "விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களை காலத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும். பாசன பகுதி மேன்மை திட்ட சுழற்சி முறை பாசனம், நீர் மேலாண்மையில் விவசாயிகளின் பங்கேற்பு மற்றும் துல்லிய பண்ணை திட்டம் போன்றவற்றின் மூலம் வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும்' என்றார். வேளாண்மை இன்ஜினியரிங் துறை நெல்லை மண்டல கண்காணிப்பு இன்ஜினியர் தமிழ்ச்செல்வன், வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம், முன்னோடி பாங்க் மேலாளர் ராமசுப்பு, தூத்துக்குடி மாவட்ட செயற்பொறியாளர் பாலச்சந்திரன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சம்பத், மாவட்ட உழவர் மன்ற தலைவர் அருணாசலம் உட்பட பலர் பேசினர். உதவி செயற்பொறியாளர் அகம்மது மீரான் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி இன்ஜினியர்கள் தன்ராஜ், அரிகரன், முகைதீன் அப்துல்காதர், முருகபாக்கியம், இளநிலை இன்ஜினியர்கள் கோலப்ப பிள்ளை, ராஜாராம் செய்திருந்தனர்.

**பாமாயில், பருப்பு விலை குறைப்பு ரேஷன் கடைகளில் மக்களுக்கு சலுகை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,01:57 IST

திருநெல்வேலி: ரேஷன் கடைகளில் பாமாயில், பருப்பு வகைகள் விலை குறைக்கப்பட்டுள்ளது. ரேஷன் கடைகளில் ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய் எனவும், ஒரு கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய் எனவும், ஒரு கிலோ உளுத்தம் பருப்பு 30 கிலோ எனவும் அரசு விலை குறைத்துள்ளது. எனவே, கடந்த 1ம் தேதி முதல் இந்த குறைக்கப்பட்ட விலையிலேயே இந்த சிறப்பு அத்யாவசிய பொருட்கள் ரேஷன்கார்டுதாரர்களுக்கு வினியோகிக்கப்படும் என்று கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார்.

**உளுந்து செயல் விளக்க வயல் விழா பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,01:37 IST

சிவகிரி: சங்குபுரம் கிராமத்தில் நீர்வள நிலவள திட்டம் சார்பில் உளுந்து செயல் விளக்க வயல் விழா பயிற்சி முகாம் நடந்தது. சங்குபுரம் கிராமத்தில் நீர்வள நிலவள திட்டம் (கலிங்கலாறு உபவடி நிலம்) 2010-11ன்படி உளுந்து செயல் விளக்க திடல்களின் அறுவடை வயல் விழா பயிற்சி முகாம் பஞ்.,துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடந்தது. வேளாண்மை துணை அலுவலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் பேசும்போது, நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் சங்குபுரம் கிராமத்தில் 25 ஹெக்டேர் உளுந்து செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அறுவடை பணிகளின் வயல் விழாவில் மகசூல் விபரங்களை சேகரித்து தர கேட்டுக் கொண்டார். மேலும் விதை நேர்த்தி முதல் அறுவடை வரை விவசாய துறையினரின் ஆலேசானைகளின்படி தொழில் நுட்பங்கள் கடைபிடிக்கப்பட்டதால் நல்ல மகசூல் கண்டிருப்பதை விளக்கி கூறி இதனை அனைத்து விவசாயிகளும் வரும் பருவ காலங்களில் பயறுவகை பயிர் சாகுபடி செய்யும்போது கடைபிடிக்க வேண்டும் என்றார். நெல்லை வேளாண்மை துணை இயக்குநர் (மாநில அரசு திட்டம்) துரைப்பாண்டியன் பேசும்போது, பயறுவகை பயிரில் செயல் விளக்க திடல் பகுதிகளில் மற்ற பகுதிகளைவிட கூடுதல் மகசூல் கண்டிருப்பதை எடுத்துக் கூறினார். மேலும் மழைநீர் பற்றாக்குறை இருந்தபோதும் உளுந்து பயிருக்கு டிஏபி கரைசல் தெளிப்பு மற்றும் தேவையான நேரங்களில் பயிர் பாதுகாப்பு பணி ஆகிய தொழில் நுட்பங்கள் கடைபிடிக்கப்பட்டதால்தான் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற விவரத்தையும் கூறினார். சங்குபுரம் பாலசுப்பிரமணியம் என்பவரின் உளுந்து வயலில் அறுவடை பணிகள் செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது. இந்த அறுவடை பணிகளை தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட கரும்பு துல்லிய பண்ணைய வேளாண்மை துணை அலுவலர் நமசிவாயம் ஒருங்கிணைத்து செய்து காண்பித்தார். பயிற்சியில் சங்குபுரம் கிராமத்தை சேர்ந்த திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி

வேளாண்மை அலுவலர் அண்ணாதுரை நன்றி கூறினார். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, சரவணக்குமார், ஜெயபண்டியன் செய்திருந்தனர். தேவிப்பட்டணம் கிராமத்தில் பஞ்.,தலைவர் வேலம்மாள் தலைமையில் வயல்விழா பயிற்சி முகாம் நடந்தது.

**வாழை நாரில் அலங்கார பொருள் செய்த, குமரி பெண்ணுக்கு தேசிய விருது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,00:34 IST

நாகர்கோவில்: பெங்களூரில் நடந்த நிகழ்ச்சியில் வாழை நாரில் அலங்கார பொருள் செய்த குமரி பெண் தேசிய விருது பெற்றுள்ளார். சர்வதேச நிறுவனங்களான சிற்றி பவுன்டேஷன், பார்ட்னர்ஸ் இன் சேன்ஜ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து சிறுதொழில் முனைவோருக்கான தேசிய விருது வழங்கும் தேர்வு நடத்தியது. இந்த தேர்வை பெங்களூர் இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் நிறுவனம் நடத்தியது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த குட்விஷன் நிறுவன உறுப்பினர் டாடா மேரி வாழை நாரில் பரிசு பொருட்கள் மற்றும் அலங்கார பொருட்கள் செய்து அதை தேசிய விருது போட்டிக்கு அனுப்பினார். அதைப்போல் இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களை சேர்ந்த 925 பேர் தங்கள் சிறுதொழில் சார்ந்த உற்பத்தி பொருட்களை தேசிய விருதுக்கு அனுப்பியிருந்தனர். பல நிலைகளாக நடந்த தேர்வில் மூன்று பேர் தேர்வு செய்யப்பட்டனர். அதில் குமரி மாவட்டத்தை சேர்ந்த டாடா மேரியும் ஒருவர். விருது வழங்கும் விழா மும்பையில் நடந்தது. விழாவில் ஓய்வு பெற்ற ரிசர்வ் பாங்க் உதவி கவர்னர் உஷா தோராத் வாழை நாரில் பரிசு பொருள் மற்றும் அலங்கார பொருள் தயாரித்த டாடா மேரிக்கு தேசிய விருதும் அதோடு தொழில் மேம்பாட்டிற்காக ஊக்கத்தொகையாக 1 லட்சம் ரூபாயும் வழங்கினார். தேசிய விருது பெற்று குமரி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த டாடாமேரியை பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள், அதிகாரிகள், பாங்குகளை சேர்ந்தவர்கள் உட்பட பலர் பலர் பாராட்டினர்.

**ஒரே நாளில் ரூ.3 கோடிக்கு ஏலம்பருத்தி விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2011,01:34 IST

வாழப்பாடி: வாழப்பாடி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 3 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. எதிர்பார்த்த விலை கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். வாழப்பாடி சுற்றுப்புற கிராமங்களில் பயிரிடப்பட்ட பருத்தி, தற்போது விளைந்து அறுவடை துவங்கியுள்ளது. பருத்தி அறுவடை செய்யும் விவசாயிகள், வாழப்பாடி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், ஏல முறையில் விற்பனை செய்கின்றனர்.நேற்று நடந்த ஏலத்தில், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் 20 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து குவித்திருந்தனர். கூட்டுறவு விற்பனை சங்கம், நிரம்பி வழிந்ததால், எதிரே உள்ள தனியார் நிலத்தில் பருத்தி மூட்டைகளை அடுக்கி

வைத்திருந்தனர்.தமிழகத்தில், கோவை, ஈரோடு, திருப்பூர், அரியலூர், கோவில்பட்டி, திருவாரூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் மட்டுமின்றி, பல்வேறு பகுதிகளை சேர்ந்த மில் அதிபர்களும், ஏஜன்ட்களும் விற்பனை சங்கத்தில் பருத்தியை கொள்முதல் செய்ய முகாமிட்டிருந்தனர்.நேற்று ஒரே நாளில் நடந்த ஏலத்தில் மட்டும், மூன்று கோடி ரூபாய்க்கு பருத்தி விற்பனை நடந்தது. பருத்திக்கு எதிர்பார்த்த விலை கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**மானிய விலையில் பி.வி.சி., பைப்புகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,22:34 IST

வாலாஜாபாத் : வாலாஜாபாத்தை சுற்றியுள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் பி.வி.சி., பைப்புகள் வழங்கப்படுகிறது என, வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: ஐசோபாம் எண்ணைய் வித்து பெருக்கு திட்டத்தின் கீழ், இரண்டரை இன்ச் அளவுள்ள பைப்புகள் வழங்கப்படுகிறது. விவசாயிகள் இவ்வாய்ப்பை பயன்படுத்தி, 800 மீட்டர் நீளம் உள்ள பி.வி.சி., பைப்புகளை பெற்றுக் கொள்ளலாம். பைப்புகளின் நிர்ணய மதிப்பு 32 ஆயித்து 100 ரூபாய். தற்போது 15 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாய்ப்பை பயன்டுத்தி பயன் பெற விரும்பும் விவசாயிகள், தங்கள் நிலத்தின் சிட்டா, கிணறு மற்றும் ஆழ்துளை கிணற்றுக்கான மின் இணைப்பு அட்டை, ரேஷன் கார்டு, புகைப்படத்துடன் வாலாஜாபாத் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகவும். விவசாயிகளுக்கு வழங்க தேவையான பைப்புகள், வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் பரந்தூர் துணை கிடங்கில் இருப்பு உள்ளது. இவ்வாறு முருகன் தெரிவித்தார்.

**முன்னறிவிப்பின்றி மின் கோபுரங்கள் அமைப்பு பயிர்கள் சேதமடைவதாக விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,22:30 IST

மாமல்லபுரம் : கல்பாக்கம் - சிறுசேரி இடையே, உயர் அழுத்த மின் இணைப்பிற்கான கோபுரங்கள், முன்னறிவிப்பின்றி வயல்வெளியில் அமைக்கப்படுவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்பாக்கத்திலிருந்து கேளம்பாக்கம் அடுத்த சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கு, உயர் அழுத்த மின் இணைப்பு வழங்கப்படுகிறது. இந்திய பவர் கிரிட் கார்ப்பரேஷன் நிறுவனம் இப்பணியை மேற்கொள்கிறது. கல்பாக்கம் முதல் சிறுசேரி வரை 230 கிலோ வாட் திறனுக்கான மின்கம்பியை இணைக்க 300 மீட்டர் இடைவெளிக்கு ஒரு கோபுரம் அமைக்கப்படுகிறது. துவக்கத்தில் பக்கிங்காம் கால்வாய் பகுதி வழியாக மின் கோபுரம் அமைக்க

முடிவு செய்யப்பட்டது. ஆறு மாதங்களுக்கு முன்பு பணி துவக்கப்பட்டது. இதனால் பாதிப்பு ஏற்படும் எனக் கருதிய ரியல் எஸ்டேட் மற்றும் தனியார் கல்லூரி நிர்வாகத்தினர் மின் கம்பி செல்லும் வழித்தடத்தை மாற்றி அமைக்க வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. அதை தொடர்ந்து, திட்டத்திற்கு தொடர்பின்றி, கிழக்கு கடற்கரை சாலையை கடந்து, திருக்கழுக்குன்றம் சாலையில் நீண்ட தொலைவில் உள்ள பெருமாளேரி, வடகடம்பாடி கிராம வயல்வெளி வழியாக அமைக்கப்படுகிறது. சில மாதங்களுக்கு முன், பெருமாளேரி உட்பட சில கிராமங்களில் ஒப்பந்த ஊழியர்கள் முன்னறிவிப்பின்றி வயலில் பணிகளை துவக்கினர்.

அதிர்ச்சியடைந்த விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். பணி நிறுத்தப்பட்டது. தற்போது மீண்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. நெற்பயிர் உள்ள நிலத்தில் ஜே.சி.பி., மூலம் பள்ளம் தோண்டுவதால் பயிர்கள் சேதமடைந்து, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து விவசாயி முனிவேலு கூறியதாவது: எவ்வித அறிவிப்பும் இல்லாமல் எங்களுக்குரிய நிலத்தில் மின் கோபுரம் அமைக்கின்றனர். இதே பணியை சில மாதங்களுக்கு முன்பு செய்ய முயன்ற போது, தடுத்து நிறுத்தினோம். அரசுக்கு புகார் அனுப்பினோம். அப்போது பணியை கைவிட்டனர். தற்போதும் தகவல் தெரிவிக்காமல் மீண்டும் பணியை துவக்கியுள்ளனர். இதனால் வயலில் நெற்பயிர் நாசமடைந்துள்ளதுடன், கால்வாய்களும் சேதமடைந்துள்ளன. இனி விவசாயம் செய்ய இயலாது. இதற்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.இவ்வாறு முனிவேலு தெரிவித்தார்.

**வன வளர்ப்பு திட்டத்தில் வனத்துறை உதவி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,21:28 IST

கோத்தகிரி : கோத்தகிரி கட்டபெட்டு வனச்சரகத்திற்கு உட்பட்ட கூக்கல்தொரையில் வனப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் விழா நடந்தது. கூக்கல்தொரை வன வளர்ப்பு திட்ட தலைவர் சண்முகன் வரவேற்றார். டி.எப்.ஒ., ராம சுப்பிரமணியம் தலைமை பேசுகையில், ""தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம், மாநிலத்தில் 2 ஆயிரம் கிராமங்களில் செயல்படுத்தப்படு வருகிறது. நாட்டின் மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில் இத்திட்டம் சிறப்பாக உள்ளது. வனத்தை பாதுகாக்க, வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதுடன், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தில் வசதியற்றவர்களுக்கு சிறுத்தொழில் தொடங்க வட்டியில்லா வங்கி கடன் வழங்கப்படுகிறது. வனத்துறைக்கும், பொதுமக்களுக்கும் இடையே உள்ள இணக்கம் மேம்படும் பட்சத்தில், வனவளமும், வனத்தை ஒட்டி வாழும் மக்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும்,'' என்றார்.

வன வளர்ப்பு திட்டத்தில் 120 பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 6 லட்சம் ரூபாயும், கம்பட்டிகம்பை மற்றும் இந்திரா காலனி கிராம சமுதாய கூடத்திற்கு தலா 5 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான சமையல் பாத்திரம் வழங்கப்பட்டது. வடக்கு வனக்கோட்ட உதவி வன பாதுகாவலர் ஜெயராஜ் முன்னிலை வகித்தார். கட்டபெட்டு வனச்சரகர் பெள்ளு, லாங்க்வுட் சோலை பாதுகாப்பு குழு செயலாளர் கருத்தாளர் ராஜூ, கூக்கல் ஊராட்சி தலைவர் லட்சுமி காமராஜ், கனரா வங்கி கிளை மேலாளர் கோவிந்தன், ஆசிரியர் செல்வராஜ், வன வளர்ப்பு பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் மணி, சிராங்கி மற்றும் சீனிவாசன் ஆகியோர் பேசினர். கூக்கல்தொரை அரசு பள்ளி மாணவ மாணவிகள், சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு கல்வி களப்பயணம் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். வனவர் கேசவன் நன்றி கூறினார்.

**பழநி உழவர்சந்தை கூடுதல் கடைகள் திறப்பு ஒத்திவைப்பு: வசதிகள் இல்லாததால் விவசாயிகள் எதிர்ப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,22:55 IST

பழநி : பழநி உழவர்சந்தையில் கூடுதல் கடைகளுக்கான திறப்பு விழா, தராசு, டியூப்லைட் வசதி இல்லாததால் ஒத்தி வைக்கப்பட்டது.

பழநி சண்முகபுரத்தில் 11 ஆண்டுகளுக்கு முன் உழவர்சந்தை அமைக்கப்பட்டது.இங்குள்ள 60 கடைகளில், சுற்று வட்டார விவசாயிகள் காய்கறி,பழங்களை விற்கின்றனர். சில வாரங்களாக, விவசாயிகள் பெயரில் வியாபாரிகள் வருகை அதிகரித்துள்ளது. கடந்த ஆகஸ்டில் இதே பிரச்னை ஏற்பட்டபோது, அதிகாரிகளிடம் இருந்து விவசாயிகள் வெள்ளை அட்டை பெற்றுவர வலியுறுத்தப்பட்டது. பலர் பெற்று வராமல், உழவர் சந்தைக்குள் பொருட்களை விற்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இதையடுத்து உழவர் சந்தையின் வெளிப்புறம் கடை விரித்து பொருட்களை விற்றனர். உழவர்சந்தையை விட, கிலோவிற்கு ஒரு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரை விலையை குறைத்து விற்பனை செய்தனர். இதனால் ஏற்பட்ட பாதிப்பை தொடர்ந்து, ஐந்து நாட்களுக்குப் பின் தற்காலிகமாக இப்பிரச்னை முடிவிற்கு வந்தது. தற்போது விவசாயிகள் மட்டுமின்றி வியாபாரிகளும், "விவசாயிகளாக' உழவர் சந்தைக்குள் வரத் துவங்கியுள்ளனர்.

இந்நிலையில் உழவர்சந்தையில் கூடுதலாக, 15 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கான துவக்கவிழா, ஜன. 31ல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் போதிய தராசு, டியூப் லைட் இல்லாததால், விவசாயிகள் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து விழா ஒத்திவைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. நிர்வாக அலுவலர் சுருளியப்பன் கூறுகையில், ""388 விவசாயிகளுக்கு விளைபொருட்களை விற்க அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. சுமார் 130 விவசாயிகள் வழக்கமாக வந்து பொருட்களை விற்பனை செய்கின்றனர். பிற விவசாயிகள்,

விளைபொருள் உற்பத்தியாகும் "சீசன்' நேரங்களில் மட்டுமே விற்பனைக்கு வருகின்றனர். தரை கடைகளான கீரை, தேங்காய் விற்பவர்களுக்காக, கூடுதல் கடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றிற்கு தராசு தேவையில்லை. மேலும் இவற்றை முக்கிய வி.ஐ.பி.,க்களைக் கொண்டு திறக்க திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

**சந்தைக்கு வரத்து அதிகம் : குறைந்தது காய்கறி விலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,22:48 IST

சிவகங்கை : சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி விலை சரிய துவங்கியுள்ளது. நேற்றைய விலை (கிலோ): கத்தரிக்காய்-20; 30 க்கு விற்ற வெண்டிக்காய் -20; பாகற்காய்-20; முருங்கை பீன்ஸ்- 40; 30 க்கு விற்ற கேரட்-40; 20 க்கு விற்ற முள்ளங்கி-18; உருளை கிழங்கு-20; 20 க்கு விற்ற முட்டை கோஸ்-10; 30 க்கு விற்ற தக்காளி -20; கருணை கிழங்கு- 30; இஞ்சி-40; இரண்டாவது ரகம் -30; 20 க்கு விற்ற அவரைக்காய்-30; 80 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்-100; 50 க்கு விற்ற வெங்காயம்-40; 30க்கு விற்ற பெல்லாரி-20; காலி பிளவர்-20; சேணை கிழங்கு-30; சேம்பு- 30. 24 க்கு விற்ற பச்சை மிளகாய்-20; 30 க்கு விற்ற பீட்ரூட்-24; 40 க்கு விற்ற நூக்கல் -30; 60 க்கு விற்ற சோயா பீன்ஸ் - 80; எலுமிச்சை- 25; 40 க்கு விற்ற பீர்க்கை -30; டர்னிப்- 30; சீனி அவரை- 15; 20 க்கு விற்ற சவ்சவ் -15; மல்லித்தழை- 20; 30 க்கு விற்ற பூசணி- 20 ரூபாய். காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்து வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பழங்கள்: 100 க்கு விற்ற ஆப்பிள்- 140; 90க்கு விற்ற 2 வது ரகம் -100; ஆந்திரா ஆரஞ்சு-50; கொடைக்கானல் ஆரஞ்சு -40; சாத்துக்குடி -40; 60 க்கு விற்ற திராட்சை (வெள்ளை) -80; மஸ்கட் (கறுப்பு) -100; கறுப்பு (சாதா)-40; அன்னாசி-30; மாதுளை-130; அதில் 2வது ரகம்-100; சப்போட்டா -20, கொய்யாப்பழம் -30 ரூபாய். ஆப்பிள், மாதுளை வரத்து குறைந்ததால் விலை அதிகரித்து வருகிறது.

**உரம் வழங்கும் முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,22:52 IST

மானாமதுரை : பீசர்பட்டிணத்தில் விவசாயிகளுக்கான உரம் வழங்கும் முகாம் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் தங்கச்சாமி பாண்டியன் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் பரமேஸ்வரன் முன்னிலை வகித்தார். துணை அலுவலர் நதிபதி வரவேற்றார். இதில் மானியத்தில், கருவிகள் வழங்கப்பட்டன. உதவி அலுவலர் பாண்டியம்மாள் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு நிவாரணம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,22:50 IST

காரைக்குடி : சாக்கோட்டை ஒன்றியத்தில் விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணமாக, 99 லட்சத்து 32 ஆயிரத்து 950 ரூபாய் வழங்கப்பட்டது. ஆம்பக்குடி, சாக்கோட்டை, புதுவயல், பெரியகோட்டை, சிறுகபட்டி, சாக்கவயல், சிறுசாக்கவயல், வீரசேகரபுரம் பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு, சாக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சார்பில் நிவாரண தொகை வழங்கப்பட்டது. சுந்தரம் எம்.எல்.ஏ., வழங்கினார். ஒன்றிய தலைவர் முத்துராமலிங்கம், துணை தலைவர் காந்தி, வட்டார தலைவர் கண்ணன், முன்னாள் ஊராட்சி தலைவர் செல்வம், கவுன்சிலர் முத்துகண்ணன் பங்கேற்றனர்.

## *அமோக விளைச்சலால் வரத்து அதிகரிப்பு காய்கறி விலை 'மளமள' சரிவு ரூ.60–க்கு விற்ற வெங்காயம் ரூ.25 ஆக குறைந்தது*

*சென்னை, பிப்.3–*

*காய்கறி அமோக விளைச்சலால், வரத்தும் அதிகரித்துள்ளது. இதனால், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை மளமளவென சரிந்துள்ளது.*

*காய்கறி விலை உயர்வு*

*வடகிழக்கு பருவ மழை இந்த ஆண்டு கூடுதலாக பெய்ததால், காய்கறி, நெல் உள்ளிட்ட பயிர்கள் பெருமளவில் நாசமாகின. இதனால், விலையும் கிடுகிடுவென உயர்ந்தது. குறிப்பாக, காய்கறி வகைகள் விலை கிலோ ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது. அதிலும், பெரிய வெங்காயம் ரூ.100 வரை விலை உயர்ந்து மத்திய அரசையே மிரளச் செய்தது. அதன் பின்னர், சற்று குறைந்து ரூ.60–க்கு விற்பனையாகி கொண்டிருந்தது. இந்த நிலையில், தற்போது மழை ஓய்ந்ததை தொடர்ந்து, காய்கறி விளைச்சல் அதிகரித்துள்ளது.*

*வரத்து அதிகரிப்பு*

*அதனைத் தொடர்ந்து, சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு தினமும் வரும் காய்கறியின் அளவும் அதிகரித்துள்ளது. இதனால், விலையும் மளமளவென குறைந்துள்ளது. கடந்த வாரம் ரூ.15–க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கோஸ்*

ரூ.8 ஆக குறைந்துள்ளது.
இதேபோல், கேரட் ஒரு கிலோ ரூ.30–ல் இருந்து ரூ.18 ஆகவும், பீன்ஸ் ரூ.22–ல் இருந்து ரூ.16 ஆகவும், பீட்ரூட் ரூ.15–ல் இருந்து ரூ.13 ஆகவும், சவ்சவ் ரூ.12–ல் இருந்து ரூ.6 ஆகவும், முள்ளங்கி ரூ.15–ல் இருந்து ரூ.8 ஆகவும் விலை குறைந்துள்ளது.
வெங்காயம் ரூ.25
மேலும், பச்சை பட்டாணி ஒரு கிலோ ரூ.80–ல் இருந்து ரூ.20 ஆகவும், சேப்பங்கிழங்கு ரூ.18–ல் இருந்து ரூ.15 ஆகவும், பச்சை மிளகாய் ரூ.18–ல் இருந்து ரூ.10 ஆகவும், இஞ்சி ரூ.35–ல் இருந்து ரூ.30 ஆகவும், பாகற்காய் ரூ.20–ல் இருந்து ரூ.15 ஆகவும் விலை சரிந்துள்ளது.
இதேபோல், புடலங்காய் ரூ.30–ல் இருந்து ரூ.15 ஆகவும், கத்தரிக்காய் ரூ.22–ல் இருந்து ரூ.10 ஆகவும், தக்காளி ரூ.35–ல் இருந்து ரூ.20 ஆகவும், பெரிய வெங்காயம் ரூ.60–ல் இருந்து ரூ.25 ஆகவும் விலை குறைந்துள்ளது.
கடந்த வார விலையிலேயே சேனைக்கிழங்கு ஒரு கிலோ ரூ.18, வெண்டைக்காய் ரூ.30, சின்ன வெங்காயம் ரூ.40–க்கு விற்பனையானது.
ஒரு கட்டு கீரை ரூ.5
சென்னையில் ரூ.5–க்கு விற்பனையான ஒரு கட்டு கீரை விலை, மழை பெய்து கொண்டிருந்த சமயத்தில் ரூ.20 வரை உயர்ந்தது. எந்த வகை கீரையை எடுத்தாலும் ரூ.20 என விலை இருந்ததால், பொதுமக்களே கீரை கட்டு வாங்க யோசித்தனர். அதன்பின்னர், சற்று விலை குறைந்து ரூ.10–க்கு கீரை கட்டு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில், தற்போது மழை ஓய்ந்து வெயில் அடிப்பதால், கீரை வகைகள் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. அதனால், கீரை கட்டு விலை மீண்டும் ரூ.5–க்கு வந்துள்ளது.

## பண்டிப்பூரில் பிடித்த காட்டுத் தீ முதுமலைக்கு பரவியது; 300 ஏக்கர் வனப்பகுதி நாசம்

மசினகுடி, பிப்.3–
பண்டிப்பூர் வனப்பகுதியில் பிடித்த பயங்கர காட்டுத்தீ முதுமலை வனப்பகுதியில் பரவியதால் 300 ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமானது.
பயங்கர காட்டுத்தீ
கர்நாடகா மாநிலம் பண்டிப்பூர் வனப்பகுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பயங்கர காட்டுத்தீ பிடித்தது. அந்த காட்டுத்தீ வேகமாக பரவி அருகில் உள்ள முதுமலை

புலிகள் காப்பக வனப்பகுதிக்குள் பரவும் அபாயம் ஏற்பட்டது.

மேலும் நீலகிரி மாவட்டத்துக்குட்பட்ட முதுமலை புலிகள் காப்பக பகுதியில் காட்டுத்தீ பரவினால் பயங்கர சேதம் ஏற்படும் நிலை உருவானது. இதனைத்தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை வனத் துறையினர் 125 பேர் தமிழக–கர்நாடக எல்லை வனப்பகுதியான கக்கனல்லா காட்டுக்கு விரைந்து சென்றனர். அங்கு அவர்கள் எதிர் திசையில் தீவைத்து, காட்டுத்தீ முதுமலை புலிகள் காப்பக பகுதிக்குள் பரவாமல் தடுத்தனர்.

300 ஏக்கர் நாசம்

ஆனாலும் முதுமலை புலிகள் காப்பக பகுதிக்குள் எதிர்பாராத விதமாக காட்டுத்தீ பரவியது. காற்று பலமாக வீசியதால் காட்டுத்தீ மள, மளவென பிடித்து எரிந்தது. இதனால் வறட்சியினால் காய்ந்து இருந்த செடி, கொடிகள், புல்பூண்டுகள் தீயில் கருகின. தொடர்ந்து வனத்துறையினர் போராடி நேற்று முன்தினம் இரவு தீயை அணைத்தனர். இந்த காட்டுத்தீயினால் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் காடு நாசமாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.இதுகுறித்து முதுமலை புலிகள் காப்பக முதன்மை வனபாதுகாவலர் ராஜூவ் கே.ஸ்ரீவஸ்தவா நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–கர்நாடகா மாநிலம் பண்டிப்பூர் வனப்பகுதியில் பிடித்த காட்டுத்தீ, முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதிக்குள் பரவியது. வனத்துறை ஊழியர்கள், வேட்டை தடுப்பு காவலர்கள் என 125 பேர் போராடி காட்டுத்தீயை நேற்று முன்தினம் இரவு அணைத்தனர். இந்த காட்டுத்தீயினால் 100 ஹெக்டர் வனப்பகுதி எரிந்து விட்டது.

5 குழுக்கள்

இந்த ஆண்டு முதல்முறையாக இந்த காட்டுத்தீ பிடித்துள்ளது. இதற்குமேல் வறட்சி காலம் நீடிப்பதால், காட்டுத்தீ ஏற்படாமல் தடுக்க 5 குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவினர் காட்டுத்தீ ஏற்படுவதை தடுக்க தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள்.மேலும் காட்டுத்தீ பிடித்தால் வனத்துறை தொலைபேசி எண் 0423–2526100 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# வேளாண்மை செய்திகள்

**கோடை காலம் வரும் முன்னர்**

## தென்னை மரத்தை பராமரிக்க வேண்டிய வழிமுறைகள்

இந்தியாவில் தென்னை மரம் அதிகம் பயிரிடும் மாநிலங்களில் தமிழ்நாடு 2–வது இடத்தை வகிக்கிறது. அதிக பனி, குளிர் மற்றும் கடும் வெப்பம் ஆகிய பகுதிகளில் தென்னை மரம் வளர்வதில்லை. பொதுவாக தென்னை மரங்கள் அதிக தண்ணீர் மற்றும் வறட்சியை தாங்கி வளருவதில்லை. மேலும் மேல் மண் ஒரு அடி ஆழத்துக்கு பாதிப்பு ஏற்படுமானால் மட்டைகள் பழுத்து விழுந்து விடும். மேல்பரப்பில் பரவி உள்ள வேர்களும் வரண்டு காய்ந்து விடும்.

இந்த நிலையில் வருகிற கோடை காலமான ஏப்ரல், மே மாதங்களில் தென்னை மரங்களில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து திருவையாறு தென்னை ஆராய்ச்சியாளர் வா. செல்வம் விளக்கம் அளித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:–

### சிகப்பு கூண்வண்டு தாக்குதல்

தென்னை மரத்தில் உள்ள வேர்கள் தண்ணீர் மற்றும் உரம் தேடி 300 அடி நீளம் வரை செல்லும். இதனால் ஒரு விரல் அளவு உள்ள வேர்கள் அறுபடாமல் இருக்க லேசாக கீறி விட வேண்டும். ஆழம் உழக்கூடிய சட்டி கலப்பை, கல்டிவேட்டர்களை பயன்படுத்தினால் வேர் அடுக்கு குலைந்து விடும். அவ்வாறு மேற்கொண்டால் மரத்தில் காயம் ஏற்படும். அந்த காயம் வழியாக சிகப்பு கூண் வண்டு புகுந்து மரத்தை தின்று கொன்று விடும். இதை தடுக்க வரப்புகள் அமைத்து நீர் பாய்ச்சும் சொட்டுநீர் குழாய்களை சரி செய்து அடைப்பு நீக்கி பாதுகாக்க வேண்டும். 3 அல்லது 4 வயது உடைய தென்னை மரங்கள் வளரும் தோப்புகளில் மட்டைகள் சாய்வாக தொங்கி நிற்கும். அப்போது மேற்கொள்ளும் உழவுக்காக மட்டைகளை வெட்டக் கூடாது.

### உரம்

திருவையாறு தென்னை ஆராய்ச்சி மையம் கண்டுபிடித்து உள்ள மட்டை குட்டையாக வளரும் திருவையாறு 2 ரக தென்னங்கன்றை நடவேண்டும். ஒவ்வொரு மரத்துக்கும் 5 அடி தள்ளி அதாவது 10–க்கு 10 சதுர அடி தள்ளி வரப்பு அமைத்துக் கொள்ள வேண்டும். அதன் அருகில் வாய்க்கால் அமைத்து 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒரு மரத்துக்கு தண்ணீர் பாய்ச்சிய பின்னர் அடுத்த மரத்துக்கு நீர் பாய்ச்ச வேண்டும். அவ்வாறு செய்தால் தான் ஒரு மரத்துக்கு கொடுக்கும் உரம் அந்த மரத்துக்கு மட்டுமே சேரும்.

இதன் மூலம் ஒரு மரத்தில் உள்ள வாடல் நோய், நூற்புழுக்கள், பூஞ்சாணம் போன்ற நோய்களின் முட்டை, லார்வாக்கள் தண்ணீருடன் கலந்து அடுத்த மரத்துக்கு பரவுவதை தடுக்க முடியும். இதனால் பாதிப்பு அடைந்த மரத்துக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க முடியும்.

### கல்பவிருட்சா கலவை

இதே போல் தென்னை மரத்தில் இருந்து 3 அடி தள்ளி வேர்கள் அறுபடாமல் இருக்க மண்ணால் அரை வட்டம் எடுத்து தென்னை மரத்துக்கு என்று தயாரிக்கப்பட்ட கல்பவிருட்சா கலவையை ஒரு கிலோ அளவில் கொடுக்க வேண்டும். இதை தொடர்ந்து ஒரு கிலோ யூரியா கொடுக்க வேண்டும்.

இதைத் தொடர்ந்து 10 கிலோ அளவு தொழு உரம் போட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இதை தொடர்ந்து தென்னை மரத்தில் இருந்து விழுந்துள்ள மட்டைகளை எடுத்து மரத்தை சுற்றி பரப்பி விட வேண்டும். இதன் காரணமாக ஈரம் அதிக நாட்கள் இருக்கும்.

### பூஞ்சாண நோய்

தென்னை மரத்தில் உள்ள பூக்கள் கருகி பிஞ்சுகள் உதிர்வது சத்து பற்றாக்குறையால் ஏற்படுவது ஆகும். இதே போல் பூஞ்சாண எதிர்ப்பு சக்தி குறைபாடும் ஒரு காரணம் என்று கண்டறியப்பட்டு உள்ளது. உதிர்ந்து கிடக்கும் பிஞ்சுகளை எடுத்து பார்த்தால் சாம்பல் நிறத்தில் படர்ந்து பூஞ்சாணம் வளர்ந்து இருப்பது தெரியும். இதை தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்க கோகோஸ் உர மருந்தை மட்டை இடுக்குகளில் வைக்க வேண்டும். இது தாவர வகை படைராகும். இதை வைப்பதன் மூலம் பூஞ்சாண வியாதிக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. அதில் உள்ள இயற்கையான சத்துகள் இலை வழி உணவாகி பாளைகள் 5 பங்கு பெரியதாகவும், மூன்று பங்கு அதிக நீளமாகவும் வளர்கிறது. மகசூல் 80 சதவீதத்துக்கும் அதிகமாக கிடைக்கிறது. மேலும் தென்னையில் குலை அதிகம் பெருகி அதிக விளைச்சலை தர வல்லது.

எனவே கோடை காலம் வரும் முன் தென்னை மரங்களுக்கு உரிய பயிர்பாதுகாப்பு மேற்கொண்டால் தென்னை மரத்தில் அதிக மகசூல் பெற முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## நீண்ட ஆயுள் தரும் 'துத்தி கீரை'



நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவு பொருட்களில் கீரை அதிக சத்துக்கள் கொண்டது. உடலுக்கு தேவையான சத்துக்களை பெற உணவில் கீரைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பொது மக்களுக்கு டாக்டர்கள் அறிவுரை வழங்கி வருகிறார்கள். ஒவ்வொரு வகை கீரையிலும் பல்வேறு சத்துக்கள் அடங்கி உள்ளன. குறைந்த விலையில் உடலுக்கு அதிக சக்தி தரும் உணவு பொருளாக கீரை விளங்குகிறது.

### துத்தி கீரை

இந்த வகையில் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட கீரை 'துத்தி' ஆகும். இது கக்கடி, இக்கசி என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இதில் பால் துத்தி, சிறு துத்தி, ஐயிதழ் துத்தி, கொடி துத்தி, நில துத்தி என்ற பலவகைகள் உள்ளன. துத்தி கீரை அதிக வெப்பம் கொண்ட பகுதிகளில் வளரக்கூடியது.

இது சிறியவகை மரம் போன்று வளரும். இலை, பூ, வேர், பட்டை என அனைத்து பகுதிகளும் மருத்துவ குணம் கொண்டது. மூலிகை மருத்துவத்தில் பல்வேறு நோய்களை குணப்படுத்தும் மருந்தாக துத்தி கீரை பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக மூலநோயை குணப்படுத்தும் மருந்தாக துத்தி கீரை பயன்படுகிறது.

### மூல நோய்க்கு மருந்து

துத்தி கீரையை பாசிப்பருப்பு, சின்ன வெங்காயம் ஆகியவற்றை கொண்டு சமைத்து சாப்பிட்டு வர மூலநோய் குணமாகும். மக்களின் அன்றாட வாழ்க்கை பரப்புடன் காணப்படுகிறது. இதனால் பொறுமையாக உட்கார்ந்து சாப்பிட கூட போதி நேரம் இல்லாமல் பலர் உள்ளனர். உணவு கடமைக்கு சாப்பிடும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

உணவை அவசரமாக உண்பதாலும், நன்கு மென்று சாப்பிடாமல் விழுங்குவதால் செரிமானம் பாதிக்கப்பட்டு மலச்சிக்கல் ஏற்படுகிறது. இது போன்ற பிரச்சினை உள்ளவர்கள் துத்தி கீரை, பாசி பருப்பு ஆகியவற்றை சமைத்து சாப்பாட்டுடன் நெய் சேர்த்து சாப்பிட உணவு செரிமானம் அதிகரித்து மலச்சிக்கல் பிரச்சினை தீரும்.

### வெப்பத்தை தணிக்கும்

நம்முடைய உணவு பழக்க வழக்கம், வாழும் பகுதிகளில் உள்ள கால நிலை ஆகியவற்றால் உடலில் வெப்பம் அதிகரிக்கிறது. இதனால் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுகின்றன. இதற்கு துத்தி கீரையை ரசமாக தயாரித்து சாப்பிட உடல் வெப்பம் தணியும். உடல் வெப்பத்தால் சிலருக்கு கட்டிகள் தோன்றி பெரும் பிரச்சினையை ஏற்படுத்துவது உண்டு.

அவ்வாறு தோன்றும் வெப்ப கட்டிகள் மீது உள்ளவர்கள் துத்தி கீரையை சாறு பிழிந்து தடவ கட்டிகள் பழுத்து உடைந்து விடும். பின்னர் துத்தி சாறுடன், பச்சை அரிசியை மாவாக அரைத்து தடவி வர கட்டியால் ஏற்பட்ட புண்கள் ஆறும். மேலும் குடல் புண்கள், சிறுநீரக நோய் ஆகியவற்றை யும் குணப்படுத்தும்.

### உடல் ஆரோக்கியம்

இந்த கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வர உடலுக்கு தேவையான ஆரோக்கியம் கிடைப்பதுடன் நீண்ட நாள் வாழ ஆயுள் அதிகரிப்பதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே குறைந்த அளவு நிலம் உள்ளவர்கள் கூட இந்த கீரை விதைகளை வேளாண் மையங்களில் வாங்கி உற்பத்தி செய்து உணவாக பயன்படுத்தலாம். விவசாயிகள் விவசாயம் செய்துள்ள நிலத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி உற்பத்தி செய்யலாம். இதற்கு செலவும் மிகவும் குறைவானது.

## விவசாய கேள்வி பதில்

**கேள்வி:** எனது தந்தைக்கு சொந்தமாக சிறிய அளவில் நிலம் உள்ளது. இந்த நிலத்தில் மரபு வழி அல்லாத, ஆனால் விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட விரும்புகின்றேன். என்ன மாதிரியான தொழிலை தொடங்கலாம்? தனசேகர், கோவை.

**பதில்:** தற்போது உள்ள நிலையில் விவசாய விளைபொருளை நேரடியாக விற்பனை செய்வதை விட அவற்றை மதிப்பூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்தால் அதிக அளவு லாபம் கிடைக்கிறது என்பது உண்மை. உதாரணமாக காளான் வளர்ப்பில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். காளானை பறித்து அப்படியே விற்பனை செய்வதை விட, நகரின் சில இடங்களில் உங்கள் நண்பர்களை கொண்டும், உங்களுக்கு சொந்தமாகவும் காளான் சூப் விற்பனை செய்யலாம்.

இதனால் நீங்கள் உற்பத்தி செய்த காளானை உடனடியாக விற்பனை செய்து விடவும் முடியும். மேலும் காளானை நேரடியாக விற்பனை செய்யும் போது கிடைக்கும் லாபத்தை விட பல மடங்கு லாபம் பெற முடியும். காளானில் புற்று நோய் உள்ளிட்ட கடுமையான நோய்களை தடுக்கும் சில நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்து கிடப்பதால் தற்போது காளானுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. காளான் வளர்ப்பை தொடங்கும் நிலையில் உங்கள் நிலத்தை சுற்றி நிழல் தரும் மரங்களை நடுங்கள். காரணம், காளான் கொட்டகைக்கு நிழல் அவசியம்.

**கேள்வி:** எங்களது தென்னந்தோப்பில் ஊடுபயிர் செய்ய விரும்புகிறேன். இதற்கு எந்த மாதிரியான பயிரை தேர்வு செய்யலாம்? ராஜாகண்ணன், பொள்ளாச்சி.

**பதில்:** தற்போது கோகோ பயிர் அதிக லாபம் தருவதாக சில விவசாயிகள் உணர்ந்துள்ளனர். குறிப்பாக இந்த பயிருக்கு பெரிய அளவு பராமரிப்பு தேவையில்லை என்பதும், விளைபொருளுக்கு பெரிய நிறுவனங்கள் உடனடியாக பணம் கொடுத்து விடுவதாலும் கோகோ பயிரிட்டுள்ளனர். சில மாவட்டங்களில் தென்னையில் ஊடுபயிராக பாக்கு சாகுபடியும் செய்து வருகின்றன. லாபமாக தான் இருப்பதாக சொல்கிறார்கள். தென்னையும் பாக்கும் ஒரே குடும்பத்தை சேர்ந்த பயிர்கள் என்பதால் பெரிய அளவில் பராமரிப்பு, பாதுகாப்பு தேவையில்லை என்பது இதில் கூடுதல் சிறப்பு.

**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு, தினத்தந்தி,**
**கோவை–18**

